அரியநாச்சியம்மன், காமாட்சியம்மன் கோயில்களில் குடமுழுக்கு

கமுதி, ஜூன் 25: ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகேயுள்ள சாம்பக்குளம் அரியநாச்சியம்மன் கோயில், கோயில் வளாகத்தில் அமைந்துள்ள வள்ளி,தெய்வானை சமேத முருகன், செல்வ விநாயகர், பாமா ருக்மணி சமேத வேணு கோபாலசுவாமிகளுக்கு குடமுழுக்கு வியாழக்கிழமை நடைபெற்றது.

மூன்று கால யாகசாலை பூஜைகள், பூர்ணாஹுதி முடிந்து, சிவாசாரியர்கள் வேத மந்திரங்கள் முழங்க கடம் புறப்பாடு கோயிலைச் சுற்றி வந்தது. இதைத்தொடர்ந்து கோபுரக் கலசத்தில் புனித நீர் ஊற்றி குடமுழுக்கு நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெற்றது. இதில் சாம்பக்குளம், பொழிகால், கேளல், கே.ஆர்.பட்டணம், பாம்பூர், உடைகுளம் ஆகிய சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

முதுகுளத்தூர் அருகேயுள்ள சாம்பக்குளம் அரியநாச்சியம்மன் கோயில் கலசத்தில் புனிதநீர் ஊற்றி குடமுழுக்கு நடத்திய சிவாசாரியர்கள்.

காமாட்சியம்மன் கோயில்: முதுகுளத்தூர் அருகேயுள்ள புரசங்குளம் காமாட்சியம்மன் கோயிலில் காமாட்சி அம்மன், மாசானத்தான், பத்திரகாளியம்மன், விநாயகர், கருப்பணசுவாமி, பரிவார கிராமதேவதைகளுக்கு வியாழக்கிழமை குடமுழுக்கு நடைபெற்றது.

முன்னதாக, புதன்கிழமை கணபதி ஹோமத்துடன் யாகசாலை பூஜைகள், விக்னேஸ்வர பூஜை, மகா கணபதி ஹோமம், லட்சுமி, நவகிரஹ,மிருத்தஞ்சனஉள்ளிட்ட ஹோமங்கள் நடைபெற்றன. வியாழக்கிழமை வேதமந்திரங்கள் முழங்க சிவாசாரியர்கள் கோபுரக் கலசங்களில் புனிதநீர் ஊற்றி குடமுழுக்கை நடத்தினர். பின்னர், அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனையும் நடைபெற்றது. மாலையில் உலக நன்மை வேண்டி திருவிளக்கு பூஜை நடைபெற்றது. பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

திருத்தங்கல் கோயிலில் ஆனி பிரம்மோத்ஸவ கொடியேற்றம்

சிவகாசி, ஜூன் 25: விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல் நின்ற நாராயணப் பெருமாள் கோயிலில் ஆனி பிரம்மோத்ஸவத்தையொட்டி வியாழக்கிழமை கொடியேற்றம் நடைபெற்றது.

இந்தக் கோயிலில் ஆனி பிரம்மோத்ஸவத்தையொட்டி, செவ்வாய்க்கிழமை பூமி பூஜை, பாலிகா ஸ்தாபனம் உள்ளிட்ட நிகழ்வுகளும், புதன்கிழமை சேனை முதல்வர் புறப்பாடும் நடைபெற்றன. வியாழக்கிழமை சுவாமி நின்ற நாராயணப் பெருமாள், தாயார் செங்கமலத்தாய் ஆகியோருக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றன. இதைத் தொடந்து, கொடிமரத்துக்கு அபிஷேகமும், சிறப்பு பூஜைகளும் செய்து, கொடியேற்றப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது.

திருத்தங்கல் நின்ற பெருமாள் கோயில் ஆனி பிரம்மோத்ஸவத்தையொட்டி வியாழக்கிழமை நடைபெற்ற கொடியேற்றம். (வலது) கொடியேற்றத்தின் போது செங்கமலத்தாயாருடன் ஊஞ்சல் சேவையில் அருள்பாலித்த நின்ற நாராயணப் பெருமாள்.

கொடியேற்றத்தின் போது, செங்கமலத் தாயாருடன், நின்ற நாராயணப் பெருமாள் ஊஞ்சல் சேவையில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

விழாவையொட்டி, தினசரி இரவு சுவாமி, அம்பாள் வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளிப்பர். வருகிற ஜூலை 3–ஆம் தேதி தேரோட்டம் நடைபெறும். விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகம் செய்து வருகிறது.

ராஜபாளையம் மாடசாமி கோயில் குடமுழுக்கு

சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த மாடத்தி அம்மன், மாடசாமி.

ராஜபாளையம், ஜூன் 25: விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் அமைந்துள்ள மாடசாமி கோயில் குடமுழுக்கு வியாழக்கிழமை நடைபெற்றது.

முன்னதாக செவ்வாய்க்கிழமை காலை முதல் யாக சாலை பூஜைகள் தொடங்கின. இதைத் தொடர்ந்து காலை, மாலை யாக வேள்வி, சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பிறகு குடமுழுக்கையொட்டி காலையில் சிவாசாரியர்கள் வேதமந்திரங்கள் முழங்க கோபுரக் கலசத்துக்கு புனிதநீர் ஊற்றி குடமுழுக்கு செய்தனர். பிறகு பரிவார தெய்வங்களுக்கும் கும்பநீர் ஊற்றி சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் மாடசாமி அருள்பாலித்தார். பின்னர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த விழாவில் ராஜபாளையம், இதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை குடமுழுக்கு விழாக் குழுவினர் செய்திருந்தனர்.

தொழிலாளி கொலை வழக்கு: இருவருக்கு ஆயுள் தண்டனை

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூன் 25: ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே கூலித் தொழிலாளி வெட்டிக் கொலை செய்யப்பட்ட வழக்கில் இருவருக்கு ஆயுள் சிறைத்தண்டனை விதித்து, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள கூடுதல் மாவட்ட நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகேயுள்ள லட்சுமியாபுரம் பகுதியைச் சேர்ந்தவர் பார்த்திபராஜா (42). கூலித் தொழிலாளி. இவருக்கும் லட்சுமியாபுரத்தைச் சேர்ந்த ஆனந்தவள்ளி என்ற பெண்ணுக்குமிடையே பழக்கம் இருந்து வந்தது. ஆனந்தவள்ளி வேறு ஆண்களுடன் பேசுவதைக் கண்டித்து, அவருடன் பார்த்திபராஜா அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், கடந்த 2012–ஆம் ஆண்டு ஆனந்தவள்ளி வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்தார். இதுகுறித்த புகாரின் பேரில் பார்த்திபராஜா மீது நத்தம்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்தனர். இதனால் பார்த்திபராஜாவுக்கும், ஆனந்தவள்ளியின் உறவினர்களுக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது.

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில், கடந்த 2015–ஆம் ஆண்டு ஜூலை 28–ஆம் தேதி இரவு ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆனந்தவள்ளியின் சகோதரர்கள் மணிவண்ணன், முருகானந்தம், மகன் மகேஸ்வரன், உறவினர் கூடலிங்கம் ஆகியோர் சேர்ந்து பார்த்திபராஜாவை வெட்டிக் கொலை செய்தனர்.

இதுகுறித்து வழக்குப் பதிந்த ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் போலீஸார் மணிவண்ணன் (32), மகேஸ்வரன் (22), முருகானந்தம் (45), கூடலிங்கம்(25) ஆகிய 4 பேரைக் கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மணிவண்ணன், கூடலிங்கம் ஆகிய இருவருக்கும் ஆயுள் சிறைத் தண்டனையும், தலா ரூ.11 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி மணி உத்தரவிட்டார். வழக்கு விசாரணையில் இருக்கும் போது, மகேஸ்வரன், முருகானந்தம் ஆகியோர் உயிரிழந்து விட்டது குறிப்பிடத்தக்கது.

பாதரக்குடி முத்துமாரியம்மன் கோயில் குடமுழுக்கு

காரைக்குடி, ஜூன் 25: சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகேயுள்ள பாதரக்குடி முத்துமாரியம்மன் கோயில் குடமுழுக்கு வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கோயிலில் அருள்பாலித்து வரும் முத்துமாரியம்மன், மங்கள விநாயகர், சுப்பிரமணியர், கல்யாண நவக்கிரகம், பரிவாரத் தெய்வங்களுக்கு குடமுழுக்கு நடத்துவதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை யாகசாலை பூஜைகள் தொடங்கின. நான்காம் கால யாகசாலை பூஜைகள் வியாழக்கிழமை நிறைவடைந்தது. பின்னர், காலை 11 மணிக்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், துலாவூர் ஆதீனம், பாதரக்குடி ஆதீனம் ஆகியோர் முன்னிலையில் கோபுரக் கலசத்தில் புனித நீர் ஊற்றி குடமுழுக்கு நடைபெற்றது.

இதில் முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கிட் அண்ட் கிம் கல்லூரி தலைவர் வீ. ஐயப்பன், கிராம மக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பாதரக்குடி முத்துமாரியம்மன் கோயிலில் வியாழக்கிழமை நடைபெற்ற குடமுழுக்கு.

மக்கள் தொடர்பு முகாமில் நலத் திட்ட உதவிகள் அளிப்பு

சிங்கம்புணரி ஜூன் 25: சிங்கம்புணரி வட்டம், அ.காளப்பூர் கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் ரூ.34.45 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த முகாமுக்கு மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் தலைமை வகித்தார். திருப்பத்தூர் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் சீனிவாச சேதுபதி முன்னிலை வகித்தார்.

இந்தமுகாமில்வருவாய்த்துறைசார்பில் 73 பயனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.6.85 லட்சம் மதிப்பீட்டிலான உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள், பொது சுகாதார த்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு மருந்துப் பெட்டகங்கள், கர்ப்பிணித்தாய்மார்களுக்குஊட்டச்சத்துப் பெட்டகங்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 18 பயனாளிகளுக்கு ரூ.1.34 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள், கூட்டுறவுத் துறையின் சார்பில் 13 பயனாளிகளுக்கு ரூ.19 லட்சம் மதிப்பீட்டில் காசோலைகள் உள்பட ரூ.34.45 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சங்கரலட்சுமி, கால்நடை பராமரிப்புத் துறை துணை இயக்குநர் கீதா, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சத்யா, கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் ராஜேந்திரபிரசாத், தனித் துணை ஆட்சியர் அனீஷ் சத்தார், தாட்கோ மேலாளர் செலினா, வட்டாட்சியர் நாகநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விடுதலை செய்யப்பட்டும் நாடு திரும்ப முடியாமல் தவிக்கும் தமிழக மீனவர்கள்

இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட 28 தமிழக மீனவர்கள்.

ராமேசுவரம், ஜூன் 25: இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 28 பேரை தாயகம் அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர்கள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில், 28 தமிழக மீனவர்கள் இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு தாயகம் அனுப்பி வைக்க வெளிக்கடை தூதரக முகாமில் தங்கவைக்கப்பட்டனர். 10 பேர் மட்டுமே தங்கக்கூடிய நிலையில் உள்ள அறையில் 28 மீனவர்கள் 20 நாள்களாகத் தங்கியுள்ளனர்.

இதனால், அவர்கள் உடல் நலம் பாதிப்படைந்து வருவதுடன் தேவையான அடிப்படை வசதிகளின்றி அவதிக்குள்ளாகி உள்ளனர்.

இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 28 பேரை அழைத்து வர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர் சங்கத்தினர், உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda இந்தியாவின் முன்னாடு வங்கி

பேங்க் ஆப் பரோடா

கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை) : லோட்டஸ் சென்டர், 3வது தளம், எண்.4312/13D, VP ரத்தினசாமி ரோடு, மதுரை – 625 014, போன் : 0452 – 2601013, மின்னஞ்சல் : sarmdr@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ஒரக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி கவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் /அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	கவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1. ஸ்ரீ ஸ்ரீநிவாசா பிளாஸ்டிக்ஸ் (கடன்தாரர்), பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு.P.கணேசன், த/பெ.பெருமாள்சாமி, எண்.2/40, தெற்கு வீதி, ஆமாத்தூர் கிராமம், சிவகாசி – 626 005 2.திரு.P.கணேசன், (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்), த/பெ.பெருமாள்சாமி, எண்.2/40, தெற்கு வீதி, ஆமாத்தூர் கிராமம், சிவகாசி–626 005 3.திருமதி.G.கசிலா (உத்தரவாதமளித்தவர்), க/பெ.திரு.P.கணேசன், எண்.2/40, தெற்கு வீதி, ஆமாத்தூர் கிராமம், சிவகாசி – 626 005	விருதுநகர் மதிவு மாவட்டம், விருதுநகர் இணை 2 சார் பதிவு மாவட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், ஆமாத்தூர் ஊராட்சி, ஆமாத்தூர் கிராமத்தில் அமன்புன்செய் சர்வே எண்.743/3Bயில் பட்டா எண்.470ன் படி உள்ள நிலம் வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டதில் பொதுவழித்தட வண்டித்தட உரிமைகளுடன் கூடிய நிலம், மொத்தமுள்ள 1 ஏக்கர் 33 சென்ட் = 0.54.0 எக்டரில் அடங்கியதும் அதன் பகுதியுமான மனை எண்.31ல் உள்ள 1958.687 ச.அடிக்கு சமமான 181.966 சமீ நிலம் மற்றும் கட்டிடம் சேர்ந்த சொத்தின் அளவுகளாக கிழமேல் 30 அடி வடபுறம், 30½ தென்புறம், தென்வடல் 68½ அடி கிழபுறம் 61 அடி மேல்புறம் ஆக உள்ளது. இதன் **எல்லைகள் :** வடக்கே : 16 அடி அகல கிழமேல் ரோடு, கிழக்கே : மனை எண்.30, தெற்கே : மறுசர்வே எண்.744 புன்செய் நிலம், மேற்கே : மனை எண்.32, சொத்து பெருமாள்சாமி மகன் திரு.P.கணேசன் பெயரிலுள்ளது. **அட்சரேகை : N 9.559729 மற்றும் தீர்க்கரேகை : E 77.859898** BAANKNET Property ID: BARB602820210073	மொத்த நிலுவைத் தொகை 25.06.2026 தேதியன்று, ரூ.53,55,142/– (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நூற்று நாற்பத்து இரண்டு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	28.07.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு லட்சம் மட்டும்) 2. ரூ.70,000/–(ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) 3. ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)	கொள்நிலை (Physical) கவாதீனம்	24.07.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://bankofbaroda.bank.in/e-auction மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : 9790247824; என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 25.06.2026 / இடம் : மதுரை

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி) / பேங்க் ஆஃப் பரோடா